<u>நீதித்துறை நடுவர் எண் 2 நீதிமன்றம், திருப்பத்தூர், வேலூர் மாவட்டம்.</u>

<u>சி.சி. 16/2021</u>

**2022ம் ஆண்டு மார்ச் மாதம் 04ம்** நாள் வெள்ளிக்கிழமை அரசு தரப்பு சாட்சியாகிய அ.சா.1வது நபரின் வாக்குமூலம், (1969ம் ஆண்டின் 54வது விதியின் 9வது பிரிவின் ஏற்பாட்டின்படி) திரு. எஸ். பூபதி, உதவியாளர் என்பவரால் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்பட்டு சத்திய பிராமணம் செய்து வைக்கப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர | குபேந்திரன் | வயது: | 40 |
| த/பெ.(அ)க.பெ | தங்கராஜ் | தொழில்: | கார்பெண்டர் |
| ஊர் : | பள்ளவள்ளி | சமயம்: | இந்து |
| வட்டம் : | திருப்பத்தூர் | சாதி: | |
| மாவட்டம ்: | திருப்பத்தூர் | | |

முதல் விசாரணை: நான் கார்பெண்டராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 28.7.2018ம் தேதி அன்று மாலை 4.00 மணிக்கு நான் என்னுடைய அலைபேசியில் வாட்சப் உபயோகித்துக்கொண்டிருந்தேன். அப்போது 25 வயது மதிக்கத்தக்க நபர் ஒருவர் ஒரு வீடியோ ஒன்றை பதிவிட்டு அது புழக்கத்தில் இருந்தது. அந்த விடியோவில் அவர் பறப்பையல்கள் எல்லாம் தில் இருந்தால் நேரில் வந்து பேசுங்கள் பொட்டை தனமாக பேசவேண்டாம். எங்கள் அண்ணன் குரு மாதிரி தைரியமா மேடையில் ஏறி பேசுங்கள் என்று பேசி இருந்தார். மேற்கண்ட வீடியோவை பார்த்த நான் துணை காவல் கண்காணிப்பாளரிடம் புகார் அளித்தேன். பின்னர் மேற்கண்ட புகாரானது குரிசிலாப்பட்டு காவல் நிலையத்திற்கு மாற்றம் செய்யப்பட்டது நான் அளித்த புகார் மனு அ.த.சா.ஆ.1 ஆகும். மேற்கண்ட நபர் பேசிய வீடியோவை நான் சிடியாக பதிவு செய்து காவல்துறை வசம் ஒப்படைத்தேன். ஏன் முன் காட்டப்படும் சிடி தான் நான் காவல் நிலையத்தில் ஒப்படைத்ததாகும் மேற்கண்ட சிடி சா.பொ.1 ஆகம். போலீசார் என்னை விசாரித்தனர்.

எ.த.கு.வி. எதிரி மனுவின் பேரில் ஆஜர் இல்லை. குறுக்கு விசாரணை செய்ய வாய்ப்பு வழங்கப்பட்டு குறுக்கு விசாரணை செயயாமல் முடிக்கப்பட்டது.

<u>நீதித்துறை நடுவர் எண் 2 நீதிமன்றம், திருப்பத்தூர், வேலூர் மாவட்டம்.</u>

<u>சீ.சி.16/2021</u>

**2022ம் ஆண்டு மார்ச் மாதம் 04ம்** நாள் வெள்ளிக்கிழமை அரசு தரப்பு சாட்சியாகிய அ.சா.2வது நபரின் வாக்குமூலம், (1969ம் ஆண்டின் 54வது விதியின் 9வது பிரிவின் ஏற்பாட்டின்படி) திரு. எஸ். பூபதி, உதவியாளர் என்பவரால் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்பட்டு சத்திய பிராமணம் செய்து வைக்கப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர | பெருமாள் | வயது: | 40 |
| த/பெ.(அ)க.பெ | வெங்டாசலம் | தொழில்: | மளிகைக்கடை |
| ஊர் : | பள்ள்வள்ளி | சமயம்: | இந்து |
| வட்டம் : | திருப்பத்தூர் | சாதி: | |
| மாவட்டம ்: | திருப்பத்தூர் | | |

முதல் விசாரணை: நான் பள்ளவள்ளி கிராமத்தில் குடியிருந்து மளிகை கடை வைத்து தொழில் செய்து வருகிறேன். நான் இந்து ஆதிதிராவிடர் வகுப்பை சேர்ந்தவர். அ.சா.1 எனது நண்பர். கடந்த 28.07.2018ம் தேதி மாலை 4.00 மணியளவில் எனது நண்பர் குபேந்திரன் அவர் என்னிடம் வாட்சப் மூலமாக ஒரு நபர் வெளியிட்ட விடியோளை.த.கு.வி. எதிரி மனுவின் பேரில் ஆஜர் இல்லை. குறுக்கு விசாரணை செய்ய வாய்ப்பு வழங்கப்பட்டு குறுக்கு விசாரணை செயயாமல் முடிக்கப்பட்டது.வ காண்பித்தார்.அதில் ஒரு நபர் பறதேவிடியா பசங்களா எங்கள்அண்ணன் குருபேசுகின்ற மாதிரி ஆண்பிள்ளை யாராவது இருந்தால் மேடை போட்டுபேசுங்கள் நான் கவுண்டன் என்னிடம் மோதி பாருங்கள் என்று ஜாதிப் பிரச்சணையை தூண்டுமாறு பேசினார். ஆகவே ஜாதி பிரச்சணையை உருவாக்கும் வகையில் பேசியிருந்த அந்த நபரின் பெயர் சுபாஷ் என்பதும் அவருடைய ஊர் ஏரிப்பள்ளம் என்றும் தெரிந்தது. அவர்மீது நடவடிக்கை எடுக்க கோரி காவல்துறை கண்காணிப்பாளரிடம் புகார் அளித்துள்ளார். அந்த புகாரின்மீது குரிசிலாப்பட்டு காவல்நிலையத்தினர் என்னை விசாரித்தனர்.

எ.த.கு.வி. எதிரி மனுவின் பேரில் ஆஜர் இல்லை. குறுக்கு விசாரணை செய்ய வாய்ப்பு வழங்கப்பட்டு குறுக்கு விசாரணை செயயாமல் முடிக்கப்பட்டது.

<u>நீதித்துறை நடுவர் எண் 2 நீதிமன்றம், திருப்பத்தூர், வேலூர் மாவட்டம்.</u>

<u>சி.சி.16/2021</u>

**2022ம் ஆண்டு மார்ச் மாதம் 04ம்** நாள் வெள்ளிக்கிழமை அரசு தரப்பு சாட்சியாகிய அ.சா.3வது நபரின் வாக்குமூலம், (1969ம் ஆண்டின் 54வது விதியின் 9வது பிரிவின் ஏற்பாட்டின்படி) திரு. எஸ். பூபதி, உதவியாளர் என்பவரால் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்பட்டு சத்திய பிராமணம் செய்து வைக்கப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர | முரளி | வயது: | 40 |
| த/பெ.(அ)க.பெ | கிருஷ்ணன் | தொழில்: | மேஸ்திரி |
| ஊர் : | பள்ள்வள்ளி | சமயம்: | இந்து |
| வட்டம் : | திருப்பத்தூர் | சாதி: | |
| மாவட்டம : | திருப்பத்தூர் | | |

முதல் விசாரணை: நான் பள்ளவள்ளி கிராமத்தில் குடியிருந்து மேஸ்திரி வேலை செய்து வருகிறேன். கடந்த 28.07.2018ம் தேதி மாலை 4.30 மணியளவில் நான் மிட்டூர் பஸ் ஸ்டாப் என்ற குரிசிலாப்பட்டு காவல்துறையினர் வீவோ கோல்டன் கலர் ஸ்மார்ட் போன் ஒன்றை சுபாஷ்' என்ற நபரிடம் கைப்பற்றினார். அந்த போனில் அவர் ஜாதி மோதல் ஏற்படும் விதத்தில் வீடியோ வெளியிட்டு இருந்ததாகவும் அது குறித்து விசாரணை செய்துகொண்டிருந்தபோது அவர் தானாக முன் வந்து ஒப்புதல் வாக்குமூலம் ஒன்றை காவல்துறை வசம் அளித்தார். அந்த ஒப்புதல் வாக்குமூலத்தில் நான் முதலாவது சாட்சியாக கையெழுத்து இட்டேன். அந்த ஒப்புதல் வாக்குமூலத்தில் அவர் பறத்தேவடியா பையா என்று வீடியோ வெளியிட்டதாக ஒப்புக்கொண்டார். ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள முதலாவது கையெழுத்து அ.த.சா.ஆ. 2 ஆகும். பின்னர் மேற்கண்ட செல்போனை காவல்துறையினர் கைப்பற்றியபோது நான் அதில் சாட்சியாக கையெழுத்து இட்டேன். கைப்பற்றுதல் மகஜர் அ.த.சா.ஆ.3 ஆகும். மேற்கண்ட எதிரி சுபாஷ் ஆனவர் வீடியோவாக பதிவிட்ட வீடியோவை அ.சா.1 ஒரு சீடி பதிவேற்றம் செய்து காவல்துறை வசம் ஒப்படைத்தார். ஆவ்வாறு ஒப்படைக்கும்போது நான் சாட்சியாக இருந்தேன். பின்னர் இது குறித்து போலீசார் விசாரித்தனர்.

எ.த.கு.வி. எதிரி மனுவின் பேரில் ஆஜர் இல்லை. குறுக்கு விசாரணை செய்ய வாய்ப்பு வழங்கப்பட்டு குறுக்கு விசாரணை செயயாமல் முடிக்கப்பட்டது.